உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி—உஎ.] சுக்கிலஹு ஆனிமீ [பகுதி—அ.

Vol. XXVII. June-July-1929. No. 8.


## புத்தகப் பாதுகாப்பு.

புத்தகங்கள் என்றால் என்ன? அவற்றை ஏன் பாதுகாக்க வேண்டும்? அவற்றை எதிலிருந்து பாதுகாக்கவேண்டும்? பாதுகாப்பதற்கு உரிய முறைகள் யாவை? என்ற தலைப்புக்களின்கீழ் இந்தவிஷயத்தைப்பற்றி இங்கே ஆராய்வோம்.

### 1. புத்தகங்கள் என்றால் என்ன?

இக் கேள்வியானது மிகவும் அநாவசியமானது என்று சிலர் நினைக்கக்கூடும். மெய்யாக அப்படி இல்லை. இக்காலத்தில் எங்கும் காணப்படும் புத்தகங்களைப்போல முன்காலத்துப் புத்தகங்கள் இருந்ததில்லை. இவ்வுலகில் எல்லாப்பொருள்களும் உயிர்களும் பரிணாமமுறையில் மாறிமாறி வளர்ந்துவருவதுபோலவே புத்தகங்களும் வளர்ந்து வருகின்றன.

மிகப்பழமையான முன்னொருகாலத்தில் இவ்வுலகத்தில் மனித இனம் என்பதே இல்லை: பின்பு பரிணாமவிதியால் உயிர்கள் மாறிமாறி மனிதவருக்கம் உண்டாயிற்று என்பர் உயிர்நூல்வல்லார். அவ்வாறு மனிதர் முதன்முதலில் தோன்றியகாலத்தில் இக்காலத்தில் அவ்வினத்தைச்சேர்ந்த நாம் ஒருவரோடொருவர் பேசுவதுபோல் அவர் பேசவில்லை; மிருக பக்ஷிகள் குரல்வேறுபாடுகளாலும் அவயவவேறுபாடுகளாலும் தமது மனத்தில் தோன்றும் எண்ணங்களையும் உளநிகழ்ச்சிகளையும் இக்காலத்திற்கூட வெளியிட்டுவருவதுபோல் அக்காலத்தில்

மனிதரும் தம் மனத்தில் தோன்றும் எண்ணங்களையும் உளநிகழ்ச்சிகளையும் வெளியிட்டுவந்தனர். பிறகு, நாளுக்குநாள் சிறந்த அறிவைப்பெற்றுப் போற்றிப் பாராட்டிவரும் மனிதவருக்கமானது இப்பூமியில் வெவ்வேறு இடங்களில் தங்கி ஆங்காங்கு வெவ்வேறு சங்கேதமொழிகளை ஏற்படுத்திக்கொண்டு பல்வேறுபாஷைகளை அமைத்துக்கொண்டது. முதன்முதலில் இவை பேச்சில்மட்டிலும் வழங்கப்பட்டு ஒலிகளாக மட்டிலும் இருந்துவந்தன. பிறகு, கருவிகளை இயற்றிக்கொள்ள மனிதர் கற்றுக்கொண்டபின் இவை உருவங்கள் அல்லது எழுத்துக்களாகவும் தோன்றத்தொடங்கின. மனிதருடைய அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப இவை அங்கங்கே வளர்ந்தோ தடைப்பட்டோ குன்றிக் குறைந்தோ வந்தன. முதலில் எழுத்துக்களும் மொழிகளும் மரங்களின்மீதும், அவற்றிலிருந்து உரித்த பட்டைகளின்மீதும், பறித்த இலைகளின்மீதும், கற்பாறைகளின் மீதும், வேட்டையாடிக்கொன்றமிருகங்களினின்றுஉரித்த தோல்களின் மீதும் எழுதப்பட்டுவந்தன. இவைகளிற் சில எளிதிற் கெடக்கூடியன. சில அடுக்குதற்கு இயலாதன. ஆகவே அக்காலத்திற் புத்தகங்கள் என்பன கிடையா.

பிறகு, அறிவும் அனுபவமும் முதிர முதிர இவற்றுள் சிற்சிலவற்றைத் தேர்ந்தெடுத்துப் பொறுக்கித் தயார்செய்து அவை நீண்டகாலம்வரை கெடாமல் இருக்கவேண்டியதற்கு உரிய உபாயங்களைத்தேடி அவற்றை அடுக்கிச் சேர்த்துப் புத்தகமாக்கும்முறையை மனிதர் தெரிந்துகொண்டனர்.

பண்டைக்காலத்தில் நாகரிகத்திற் சிறந்த எகிப்துதேசத்தில் பபைரஸ் என்னும் ஒருவகைப் புல்லையே 'காகிதமாக' உபயோகித்து வந்தனர். இதனாற் செய்த புத்தகங்கள் சுருள் சுருளாகச் சுருட்டப்பட்டு நீலநதியின் மண்ணால் முத்திரையிடப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வந்தன. இதனினும் பழமையானவை என்று கொண்டாடப்படும் பாபிலோனியா அஸிரியா நாடுகளிற் செங்கல்களின்மீது பற்பல விஷயங்களும் குறிக்கப்படடுவந்தன. ஆகவே செங்கல்கள்தான் அந்நாட்டுக் காகிதங்கள். இச்செங்கல் தொகுதிகளாற் செய்யப்பட்ட செங்கற்புத்தகங்களை அதே உருவமுள்ள செங்கல் மேற்கூடுகளில் அடைத்து அக்கூடுகளின் வெளிப்புறத்தில் அப்புத்தகங்களின் பெயர்

களைப் பொறித்துப் புத்தகங்களைக் காப்பாற்றிவந்தனர். வேறு சில தேசங்களில் மரவுரி காகிதமாக உபயோகப்பட்டுவந்தது. எழுதப்பட்ட மரவுரியை—இக்காலத்திற் குழந்தைகள் ஓலைப்பாம்புசெய்யத் தென்னம் ஓலையை மடிப்பதுபோல் மடித்துத் தோல்வாரினாற் கோத்துக்கட்டிப் புத்தகமாக்கி மரப்பலகை அட்டையிட்டுக் காப்பாற்றிவந்தனர். சீன தேசத்தில் ஒருவகை மெய்க்காகிதமே மிகப் பழையகாலந்தொட்டே செய்யப்பட்டு அதனாற் புத்தகம் செய்யப்பட்டுவந்திருக்கிறது. நமது நாட்டிற் பெரும்பாலும் பனையோலையே காகிதமாக உபயோகப்பட்டு வந்திருக்கிறது. நமது தமிழ்நாட்டுப் பண்டைக்காலப் புத்தகங்களெல்லாம் ஓலைக்கட்டுக்களே. இவ் வோலைப்புத்தகங்களை நமது முன்னோர் துளையிட்டுக் கயிற்றாற் கோத்துக்கட்டி மரஅட்டைபோட்டுத் தூக்கில் தொங்கவிட்டு இருண்ட இடங்களில்வைத்துக் காப்பாற்றிவந்தனர்.

வேறுசிலநாடுகளில் இவ்வாறல்லாமல் எளிதில் அழியாப்பொருள்களான கல் உலோகம் இவற்றின்மீது தாம் அரிதின் அறிந்தவற்றைப் பொறித்துவந்திருக்கின்றனர். நமதுநாட்டிலுள்ள புத்தகங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது மகாபாரதம். இம்மகாபாரதக்கதையை வியாசர் சொல்ல விநாயகக்கடவுள் மேருமலையின்மீது அதை எழுதினாரென்பது நமது நாட்டு ஐதிகம். மோசேயுக்குப் பத்துக்கட்டளைகளையும் கடவுள் கல் தகடுகளிற்பொறித்து அருளினாரென்று கிறிஸ்தவப் பைபிள் கூறுகின்றது. வேந்தரின்வெற்றிகளைக் கூறும் கல்வெட்டுக்களும், அரசாணைகளைக்குறிக்கும் கல்வெட்டுக்களும்தானங்களைக்குறித்த கல்வெட்டுக்களும் நமதுநாட்டில் இக்காலத்திலும்அநேகம் ஆங்காங்குக் காணக் கிடக்கின்றன. இதேமாதிரிதான் செப்புப்பட்டயங்கள் முதலியனவும். பலநூற்றாண்டுகளுக்குமுன் செப்பேடுகளில்எழுதப்பட்ட எழுத்துக்கள் இன்றும் கெட்டுப்போகாமலிருப்பதால் அவற்றை நன்கு படிக்க இயலுகிறது. வேறுசிலநாடுகளில் மரக்கட்டைகளின்மீது எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு இக்காலத்தும் அதிகம்கிடாது காண்கின்றனவாம்.

இவ்வாறு பற்பலநாட்டினர் பல்வேறு காலத்தினர் ஆங்காங்கு அவ்வப்போது தம் அறிவைக் குறித்துக் காத்துப் பின்னோர்க்குப் பயன்படச்செய்யப் பலவாறான புதிதுபுதிதான முயற்சிகளைத் தேடித் துருவிச் செய்துவந்திருக்கின்றனர்.

## 2. புத்தகங்களை ஏன் பாதுகாக்கவேண்டும்.

மேன்மேலும் வளர்ந்து குவிகின்ற அறிவுத்திரளின் களஞ்சியங்களே புத்தகங்கள் ஆவதாலும், அவ்வறிவை உலகெங்கும் எடுத்துக்கூறுகின்ற வாயில்லா ஆசிரியர்களே அவை ஆவதாலும் அவற்றைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்பது யாவரும் ஒப்பும் விஷயம். அவற்றின் வழியாகத்தான் அறிவுக்கடல் பொங்கிவழிந்து வெள்ளமாயோடி உயிரினும் இனிய அமிர்தம்போன்ற அறிவை உலகத்தார் அனைவர்க்கும் பக்ஷபாதமின்றி அளித்துவருகிறது. ஆகவே தற்காத்துக்கொள்ளத் திறமையில்லா உயிரில்லாக் குருக்களாகிய புத்தகங்களை அறிவாளர் யாவரும் பாதுகாக்கவேண்டியது அவசியமாகுமென்பதில் ஐயமென்ன?

## 3. புத்தகங்களை எதிலிருந்து பாதுகாக்கவேண்டும்?

உலகுக்கு உயிரளிக்கும் சூரியகிரணங்களும், உணவூட்டும் மழையும், நீரும், நெருப்பும், சிற்றுயிராம் பூச்சி புழுக்களும் புத்தகங்களுக்கு இயற்கைச்சத்துருக்கள். அறிவிலிகளின் அஜாக்கிரதையாலும் வெற்றி வேந்தரின் வெறியாலும் தொலைந்த புத்தகங்கள் எத்தனை? எல்லாக் காலங்களிலும் எல்லாநாடுகளிலும் அறிவிலிகளின் அன்பிலாக்கையிலகப்பட்டு எண்ணிலாத புத்தகங்கள் தொலைந்துபோயிருக்கின்றன. அலெக்சாந்திரியாவில் அருமையானபுத்தகங்கள் அடங்கிய பெரும் புத்தகசாலை ஒன்றை ஓர் அரசன் வெற்றிவெறியில் இமைப்பொழுதில் தீக்கிரையாக்கினனென்று சரித்திரம் கூறுகின்றது. நமது நாட்டிலும் பகைமன்னர் பலர் அரியபுதகங்களை இவ்வாறு நெருப்பிலிட்டார்களென்று அறிகிறோம். மேலும் இயற்கைத் தாயின் அன்பிலாக் கொடுமையாலும் அளவற்றபுத்தகங்க[ள்] தொலைந்துபோயிருக்கின்றன. நமது தமிழ்நாட்டுப் பண்டைக்காலபுத்தகங்கள் யாவும் கடலின்பெருக்கால் தொலைந்துபோயினவென்பது தமிழ்நாட்டுப் பரம்பரை. இது தவிரப் பிறநாட்டார் அன்புகூர்ந்து இனொருநாட்டுப் புத்தகத்தைப் பறித்துப் போவதால் நேரும் தீங்கும் வன்பொடு இழைக்கும் தீங்கே ஆகும்.

உஷ்ணநாடுகளிற் பெரும்பாலும் புல்வகையாலும் இலைவகையாலும் செய்யப்பட்டபுத்தகங்கள்தான் அதிகம். இவற்றைப் பூச்சி புழுக்கள் துளைத்துத் துருவித் தின்றுவந்தன. அப்பூச்சிகள் வாராதபடி வெளிச்சமான இடங்களில் இப்புத்தகங்களை வைத்தால் பூச்சி

யினத்துக்குச் சத்துருவான சூரிய கிரணமானது இவ்விலைவகைகளுக்கும் சத்துருவாயிருந்து இவற்றை உலர்த்திச் சுவற்றி உதிர்ந்துபோகச் செய்கிறது. இருட்டில்வைத்தாலோ பூச்சிகளுக்குக் கொண்டாட்டம். வெளிச்சமான திறந்த இடங்களிற் புத்தகங்களை வைப்பதால் அவற்றைப் பலர் கையாளநேரிடும். அவர்களுள் பெரும்பாலார் நண்பரேயாயினும் கெடுதியே விளைப்பனர். மேலும் அவற்றின் மதிப்பை அறியா அறிவிலிகள் தம் அறியாமையாலும் அஜாக்கிரதையாலும் அளவிலாக் கெடுதி இயற்றுதல் கூடும்.

ஆகவே, வெயில் மழை, ஒளி இருட்டு, அன்பர் பகைவர், பூச்சி மனிதர் ஆகிய எல்லாவற்றிலிருந்தும் புத்தகங்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென்றாகிறது.

## 4. பாதுகாப்பதற்கு உரிய முறைகள் யாவை?

மேலே கூறிய காரணங்களால்தான் கொடுக்கக்குறையாச் செல்வமாகிய அறிவின்களஞ்சியங்களெனப்படும் புத்தகங்களைப் பலர் கையாளாவண்ணம் எல்லாநாடுகளிலும் தடைகள் பல ஏற்படுத்தப் பட்டனபோலும். ஆகையால் புத்தகங்களை வெகு ஜாக்கிரதையாயும் சுத்தமாயும்வைத்து அவற்றைப் பெண்தெய்வம் எனக் கொண்டாடிப் பூஜைசெய்து பரிபாலிப்பது ஒருவகையான சிறந்த காப்புமுறையென்றே தோன்றுகிறது. சிற்சிலநாடுகளில் தோலாலும் தோல்வகைப் பொருளாலும் செய்யப்பட்டபுத்தகங்களை மதக்கோயில்களிலே வைத்து, அவற்றைப் பாதுகாக்கும் சிறந்ததொழிலை, அவற்றின் அருமை தெரிந்த சிறந்த அறிவாளிகளிடத்தில்மட்டுமே ஒப்புவித்து, அறிவிலாப் பாமரர்கள் அவற்றை அணுகாவண்ணம் பாதுகாத்துவந்தனர். வேறு சிலநாடுகளில் இறந்தவர்பிணத்தோடு புத்தகங்களைப் பெட்டிகளில் வைத்து அடக்கம் செய்தனர். இன்னும் சில நாடுகளில் ஜாடிகளிலும் நிலவறைகளிலும் புத்தகங்களைவைத்துக் காப்பாற்றிவந்தனர். இக்காலத்தில் ஆராய்ச்சியாளர் ஆங்காங்குப் பூமியைத் தோண்டிப்பார்க்கும் போது அவை இந்நாள்வரை பாதுகாக்கப்பட்டுப் பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களையும் அறிவையும் நமக்குப் புலப்படுத்துகின்றன.

இம் முறைகளாற் புத்தகங்கள் காக்கப்பட்டனவே எனினும் யாவரும் புத்தகங்களோடு நெருங்கிப் பழகுவதற்கில்லாததால் அறிவின்

வளர்ச்சி ஓர் அளவு தடைபட்டுத்தான்போயிற்று. யாவர்க்கும் பொதுவான சிறந்த அறிவை உலகத்தார் அனைவரும் அடையுமாறு செய்யப்படும் ஏற்பாடுகளல்லவோ சிறந்தவை?

கோட்டைக்குள்ளிருந்தும் குழிக்குள் இருந்தும் தம்மைக் காத்துக்கொள்ளும் யுத்தமுறைபோன்றது இத் தகைய தற்காப்புமுறை. எங்கும் உலவி, அறிவை யாவர்க்கும் புகட்டி, உலகத்தார் மேன்மையடைந்து இன்புற்றிருக்கச்செய்யவேண்டிய அரிய புத்தகங்களைத் துளையிட்டுக் கயிற்றுற்கட்டித் தூக்கிற்போட்டும், காற்றும் ஒளியும் உலவா இருட்டறைகளில் அடைத்தும், அவற்றை யாவரும் அணுகாது தனிக்காவலில்வைத்துக் காத்தும் பெருங்குற்றஞ்செய்த கைதிகளைப் போற் காத்துவருவது அவற்றை மிகக் குறைவாய்நடத்துவதாகுமல்லவா?

ஆனல் முன்காலத்தவர் வேறென்னசெய்ய முடியும்? அக்காலத்துப் புத்தகங்கள் யாவும் கையால் எழுதப்பட்டுவந்தன. கையால் எழுதுவது மிகவும் கஷ்டமானதுமன்றி மிகவும் மெதுவாக நடைபெறும் தொழில். அச்சுக்கோக்கும் முறை உலகிற் பாவியதும் இது அவ்வளவும் மாறிவிட்டது.

இக்காலத்தில் அச்சுப்புத்தகங்கள் உலகெங்கும் மலிந்துசொரிய, யுத்தமுறையிற்போலவே அறிவுமுறையிலும் அறிவைப்பாப்பும்பொருட்டு எதிர்ப்புமுறையைக் கையாளுகின்றனர். ஆயிரக்கணக்கான புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டுக் காரிருள்போன்ற அறிவின்மையை அடித்துத் துரத்தித் தொலைக்கும் சைன்னியமாக அவற்றை உபயோகிக்கின்றனர். இதுகாறும் அறிவின்மையே மேலோங்கி எதிர்த்துப் போராடியபோது, எதிர்க்கப்பட்ட சைன்னியமானது கோட்டைக்குட் பின்வாங்கி உள்ளிருந்தே தன்னைக் காத்துக் கொள்வதுபோல், கோயில்களிலும் மற்றத் தனியிடங்களிலும் புத்தகங்கள் பத்திரமாய்வைத்துக் காப்பாற்றப்பட்டுவந்தன. இப்பொழுது அறிவானது தலைநிமிர்ந்து மேலோங்கி உலகெங்கும் திக்குவிஜயம்செய்ய வெளியே புறப்பட்டுவிட்டது. இந்தப் போராட்டத்தில் எண்ணிலாப் புத்தகங்கள் தொலைந்துபோவன என்பது உறுதி: ஆயினும், அவை தொலையத் தொலைய மேன்மேலும் புத்தகங்கள் பல்லாயிரக்கணக்காய் இயற்றப்பட்டு அறிவைப்

பெருக்கிவரக் காரணமாகின்றன. ஆதலாற் பொதுவாகக் கூறும்போது தற்காலத்திற் புத்தகங்களைப் பாதுகாப்பது முன்காலத்திற்போல அவ்வளவு அவசியமில்லை என்றே கூறவேண்டும். ஆயினும் கண்ணின் மணியைப்போற் பாதுகாக்கவேண்டிய அரியபுத்தகங்கள் இக்காலத்திலும் பல உள.

ஆனதுபற்றி இந்நாளிலும்கூடப் புத்தகங்களைப் பாதுகாத்தற்குரிய முறைகள் பல கையாளப்பட்டுவருகின்றன. புத்தகக்காகிதம் அச்சு, கட்டுமானம் இவற்றை நன்றாகத் தேடி ஆராய்ந்து உபயோகிப்பதாலும் அவற்றுக்கு வேண்டிய வசதி, காவல், சிகிச்சை இவைகளைச் சரிவரக் கவனித்துவருவதாலும் புத்தகங்கள் இக்காலத்திலும் நன்கு காக்கப்பட்டுவருகின்றன.

எளிதிற் கெட்டுப்போகாததாயும் வெகுகாலம் இருக்கக்கூடியதாயும் கண்ணுக்கு அழகாகத் தோன்றுகிறதாயும், கைக்கு வழவழப்பாய் மிருதுவாய்த் தொடுவதற்கே மிக்க சுகத்தைத் தருவதாயுமுள்ள நல்ல காகிதத்திற் புத்தகங்களை இயற்றுவோர் அவற்றை அச்சிடுகின்றனர். ஆகையால் வெயிலும் ஈரமும் இவற்றை அவ்வளவு பாதிப்பதில்லை. பூச்சிகளும் சிற்சிலவகைக் காகிதங்களை அருவருக்கின்றன. குழந்தைகள் விளையாடி இழுத்துக் கிழித்தாலும் அழியாத கிழிக்கொணாத துணிப்புத்தகங்கள் செய்கிறார்கள். நீரில் நனைத்தாலும் கெடாத உலோகப் புத்தகங்கள் செய்கிறார்கள்.

நாள் ஆக ஆக வாவர மங்கி மறைந்துபோகாத நல்ல மையையே தேர்ந்தெடுத்து அச்சிடுவதற்கு உபயோகித்துவருவதாற் புத்தகங்கள் நீடித்தகாலம் படிக்கக்கூடியநிலைமையில் இருந்துவருகின்றன.

புத்தகங்களைப் படிக்கும்பொருட்டு அவற்றைக் கையாளுவோரின் அஜாக்கிரதையாலும் வெகு புத்தகங்கள் கெட்டுப்போகின்றன. அவ்வாறு கெடாவண்ணம் புத்தகங்களைக் கட்டுவது, அல்லது பயிண்டு செய்வது வெகுகாலமாக நடந்துவருகிற பாதுகாப்புமுறை. அழகிய பெண்ணின் பாங்கியர் அவளுக்குச்செய்யும் அலங்காரத்தைப்போற் புத்தகம் கட்டுவோர் புத்தங்களை வகைவகையாய்ச் சிங்காரிக்கின்றனர். அழகழகாய்க் கண்ணுக்கு இனியதாய்க் கைகளுக்கு மெதுவாய் வழ

வழப்பாய்த் தொடும்பொழுதே இன்பம் தருவதாய் உள்ள துணியுடையும் பட்டாடையும் தோற்சட்டையும் போன்ற பல்வகை உடைகளை உடுத்திப் பொன்னும் முத்தும் நீலமும் பவழமும் பூணுவது போல் மணி மணியான எழுத்துக்களை அச்சிட்டு, அறிவிலார்மனத்தையும் எளிதிற் கவரும்வண்ணம் மிகவும் பகட்டாகப் புத்தகங்களைக் கட்டுகிறார்கள்.

இரசாயனநூலறிவாளர் ஆராய்ச்சிகளைத் துணைக்கொண்டு, புத்தகங்களுக்கு உபயோகமாகும் பொருள்கள் அனைத்தையும் நீண்ட காலம் நிற்கவல்லனவாய்த் தேடிக்கொள்கின்றனர். அவற்றின் பயனாகப் புத்தகங்கள் பாலியமரணமடையாது நீண்டகாலம் வாழ்ந்துவரத் தொடங்கிவிட்டன.

இப்படி நல்லகாகிதத்தில் அழகான எழுத்தில் அச்சிடப்பட்டு அழகிய உடை உடுத்துக் கண்ணைக்கவரும் புத்தகங்களை வெயிலும் நீரும் நெருப்பும் பூச்சியும் திருடரும் அணுகிக் கெடுத்துத் துளைத்துப் பறிக்காவண்ணம் மிகவும் அழகிய அலமாரிகள் பெட்டிகள் முதலியன பல்வகை மரத்தாலும் இரும்பாலும் தோலாலும் செய்யப்பட்டுப் புத்தகங்களுக்குத் தக்க வசதிகள் இயற்றப்படுகின்றன.

இவ்வாறு இயற்றப்பட்ட புத்தக அலமாரிகள் வைப்பதற்கு நல்ல காற்று உலாவுகின்ற பெரிய அகன்ற இடங்கள் நூதன ஆராய்ச்சிமுறைகளுக்கு இணங்கக் கட்டப்படுகின்றன.

அவ்விடங்களில் வைக்கப்படும் புத்தகங்களை அறிவிலிகளும் அஜாக்கிரதைக்காரரும் அவசரக்காரரும் கண்டபடி கையாடிக் கிழித்து மடித்து நாய்க்காதிட்டுக் கோடிட்டுக் கீறி அழுக்கிற் புரட்டிக் கெடுக்காவண்ணம் காவலாளர்களை வைத்துப் புத்தகங்களைக் காக்கின்றனர். புத்தகங்களைத் துன்பப்படுத்துவோரைக் குற்றம் சொல்லிக் குறைகூறிக் கடிந்து வரி வாங்கித் தண்டிக்கின்றனர். புத்தகங்களை அடிக்கடி கவனித்துத் தட்டித் துடைத்துப் பேணுவதாற் பூச்சிகள் அவற்றை அதிகமாக அணுகுவதில்லை. அப்படித் துணிந்துவரும் பூச்சிகளையும் புத்தகங்களுக்குத் தீங்கு இயற்றாது வெருட்டுவதற்காகப் பலவகை வாசனைப்பொடிகளையும் நாப்தலீன் உருண்டைகள்போன்ற மருந்துகளையும் உபயோகிக்கின்றனர். எவ்வளவு ஜாக்கிரதையாய்க் காத்துவந்தபோதிலும் புத்த

கங்கள் மடிந்தும் கிழிந்தும் அழுக்கடைந்தும் போகின்றன. அவ்வாறு அவற்றுக்கு நேரிடும் தீங்குகளை உடனே கவனித்துச் சீர்திருத்த ஏற்பாடுசெய்கிறார்கள். கிழிந்துபோன புத்தகங்களை ஒட்ட ஒளியை ஊடுருவவிடும் பசையை உபயோகிக்கிறார்கள். அழுக்கடைந்த புத்தகங்களைப் புதுரொட்டிபோன்ற பொருள்களைக்கொண்டு துடைத்துச் சுத்தமாக்குகிறார்கள். காலிகோபயிண்டுசெய்த புத்தக அட்டை அழுக்கடைந்தால் சுடும்வெந்நீரில் நனைத்த துணியால் அவ்வழுக்கை அகற்றி உடனே உலர்ந்த துணியால் அவற்றைத் துடைத்துப் பத்திரப்படுத்துகிறார்கள். தோற்போர்வை போர்த்த புத்தகங்களின் அட்டையை ஒலிவ எண்ணெய்யைக்கொண்டு துடைத்துக் காப்பாற்றிவருகிறார்கள்.

புத்தகங்களைப் பொன்னைபோலும் பூவைபோலும் ஜாக்கிரதையாகவும் மெதுவாகவும் பிரியமாகவும் கையாளுவதுதான் அறிவாளர் கடமை என்றும், அப்படி அவற்றைக் காப்பதுதான் அறிவாளர் தாம் பெற்றுள்ள அறிவுக்கு ஏற்ப நடந்துகொள்ளும் முறை என்றும் தெரிந்து அந்தப்படி நடந்துவருகின்றனர். அவ்வாறு யாவரும் நடந்தால் புத்தகங்கள் நீடூழிவாழ்ந்து அறிவாகிய வெள்ளிய அமிர்தத்தை மேன்மேலும் பொழியும்; அப்பொழுது நமது உலகமும் முழுதும் இருள் நீங்கி இன்புற்றுச் சுகிக்கும்.

P. N. அப்புசுவாமிஐயர் B.A., B.L.

சென்னை.

---

# யாப்பருங்கலக்காரிகையும் புத்துரையும்

"அந்தமில்பாதமளவிரண்டொத்து முடியின் வெள்ளைச்செந்துறையாகும்" என்பதில் அந்தம்என்பதற்கு நேரடியிறுதிப்பாகம்எனக்கொண்டு குறள்வெண்பாவிற்குரிய நேரடியும் சிந்தடியும் ஒத்து முடியுமாயின் அது வெள்ளைச்செந்துறையாகும் எனப் புத்துரைகாரர் பொருள்கூறிப்போந்தார். இவ்வுரைப்போக்கானே சிந்தடி தம்முளொத்தும் நேரடி தம்முளொத்தும் அது வரும் என்பது பெற்றும். "சீர்வரைபறுத்திலாமையின் எனைத்துச்சீரானும் வரப்பெறும்" என யாப்பருங்கலவிருத்தியுரைகாரர்கூறினும், சிந்தடி தம்முளொத்துவருதல் சாலாது ; முதலடியிற் சிந்தடி குறள்வெண்பாவிற்குரிய ஈற்றுச்சிந்தடிபோன்றுவருதல் பொருந்தாதாகலின். அன்றியும், அளவு என்பதற்கு நேரடி எனக் கொள்ளுதலும் பொருந்தாது ; என்னை? 'நன்றியாங்கள்' என்னும் வெள்ளைச்செந்துறை அறுசீரடியும்பெற்றுவருதலின் என்க. இவற்றானே இக்காரிகைப்பகுதிக்குச் சிந்தடியும் அளவடியும் என உம்மைத்தொகையாக்கி விரித்துப் பொருள்கூறல் சாலாது என்க. யாப்பருங்கல நூலார் வெள்ளைச்செந்துறைக்குக்காட்டிய காட்டுக்கள் நேரடியுடையவாகலின் அளவடியிரண்டொத்துவருவதே முறையெனினும் அந்தமில் பாதம் என்பதற்குச் சிந்தடி எனவுரைக்குமுறை மாறுணுறும் என்க.

'பாதவளவு' என மகரங்கெடுத்து வேற்றுமைத்தொகையாக்கிக் குறள்வெண்பாவின் இறுதியடியிலேயில்லாத (எனவே முதற்கண்ணுள்ள) நேரடியின் சீரளவே ஈற்றடியாகிய இரண்டாவதும் தனக்குரிய அளவாகக் கொண்டு ஒத்துமுடியுமாயின் அதன்பெயர் வெள்ளைச் செந்துறையாகும் எனப் பொருள்கூறுதலே சாலச் சிறந்ததென்க.

குறிப்பு:—வெண்பாவினிறுதிச்சீர் அறவே இதனுட் பயின்று வாராதென்பார் "அந்தமில்பாதவளவிரண்டொத்து" என்றார். அந்தப்

பாதம்—குறள்வெண்பாவின் இறுதிப்பாதம். அந்தமில்பாதம்—அதனீற்றின்கண்ணே இல்லாத பாதம்; அதன் முதற்கண்ணே உள்ள பாதம்; என்றது நேரடியை என்க.

இனி அந்தமில்பாதம் என்பதனைச் சிந்தடியாமெனப் பொருள் கொண்டு அதனை எழுவாயாக்கி அப்பாதமானது அளவடியோடு இரண்டுபட வொத்துமுடியின் எனப் பொருளுரைக்கினும் நான்காஞ்சீரொன்றுமே பெறிற் சாலும் என்றாகி வெண்பாவினீற்றுச்சீராகிய நாள் முதலியவும் மூன்றாஞ்சீரிலேவருதலமையுமெனப்பட்டிழிவுறும் என்க.

அந்தம் இல் அளவு பாதம் இரண்டு ஒத்து முடியின் எனக் கண்ணழித்து ஈற்றடியாகிய சிந்தடியில்லாத நேரடியிரண்டும் ஒத்து முடியின் என்று கூறலும் ஒன்று.

அன்றியும் சிந்தடியானது அளவடியைத் தன்னோடு ஒத்துவரச் செய்யர்து தான் அதனோடு இரண்டுபட வொத்துமுடியின் எனப் பொருளுரைக்கினும் அதுவும் இரண்டுபட என்றதனானே மூன்றாஞ் சீரான் இரண்டுபட்டும் நேரடியென்றதனானே ஒன்றுபட்டும் வருமெனப் பட்டு வற்றுமென்க.

இனி அவ்வெள்ளைச்செந்துறை எனைத்துச்சீரானும் வரலாகு மெனக்கோடற்குரிய பத உரை வருமாறு:—

சீரின் அந்தம் இல்—இனைத்தெனச் சீர்வரையறைப்படுதற்குரிய முடிவுபெறில்லாத. பாதம் இரண்டு அளவு ஒத்து முடியின்—இரண்டடிகள் தம்முள் அளவொத்து முடியின் என்பதாம்.

இங்ஙனம்,

நவநீதகிருஷ்ணன்.

௳

# பெருமணிக்கொத்து.

கண்ணன் செய்த கவின்கோ ளிலீலையான்
அங்கவன் சர்வ கர்த்திருத்வ முணர்த்தல்.

மரைபொரு கண்ண! துவரை யரைய!
உவரி வண்ண! நின்னொன் றுரைப்பென்
முனிகிலை கேட்டிசின்; முதுவாய்ப் புலவ!
குன்றக் குடைய குழலிசை கோவல!
மன்றற் றுளப மலர்ந்த மார்ப!
விழிவிழுங் குருவ! பிழிசெவிச்சொல்ல!
கழிபெருஞ் செல்வ! கருணைப் பிழம்ப!
வாழ்த்துவோர்க் கெளிய வாய்மைசால் வளத்த!
நீயே,
அளைமுதல கவர்ந்தனை யாகலின் மன்ற
கள்வர்தம் முள்ளுஞ் சிறந்தொரு களவினை;
ஆடிய மடந்தைய ராடைகவர்ந் தவர்தந்
நீடிய வோல நெருங்காது குழலிசைத்
தின்பம் வெஃகிய வியல்பினை யாகலிற்
காமுகர் தம்முளுஞ் சிறந்தொரு காமத்தை;
தூது போந்துழி றூற்றுவர் சூழ்ந்த
கடப்பருஞ் சமரெலாங் கடந்தனை யாகலின்
மன்னர்தம் முள்ளுஞ் சிறந்தொரு மன்னினை;
போர்த்துணை வேட்கைச் சிதடன் புதல்வற்
கோர்ப்பரும் வஞ்ச முஞற்றினை யாகலின்
வஞ்சர்தம் முள்ளுஞ் சிறந்தொரு வஞ்சினை;
கந்தைப் பெயரினன் கான்மலர் வருடி
முந்தைப் புகழ்நனி முற்றினை யாகலிற்
றொண்டர்தம் முள்ளுஞ் சிறந்தொரு தொண்டினை;
அறவோன் மகனுராற்றிய வேள்வியுண்
முறைசா றலைமை முற்றினை யாகலி

னிறையோர் தம்முளுஞ் சிறந்தோ ரிறையினை;
அன்னவன் றன்னை வாய்மையி னழிமா
றூக்கிய போக்கரும் போக்கினை யாகலிற்
பொய்ப்பொ ருள்ளுஞ் சிறந்தொரு பொய்ப்பினை;
மடக்கிய தாளுட் செம்பொருள் வணக்க
நடக்குமா றூக்கிய நம்பினீ யாகலின்
ஞானியர் தம்முளுஞ் சிறந்தொரு ஞானத்தை;
மன்னவைக் களத்தின் மின்னியற் றுகிலை
நீட்டி வளர்த்த நெடுமா லாகலிற்
காப்பவர் தம்முளுஞ் சிறந்தொரு காப்பினை;
பூட்டிய கொடுந்தளை பொடிபட் டின்புறப்
பெற்றோர்ப் பேணிய பிறப்பினை யாகலிற்
சேயர்தம் முள்ளுஞ் சிறந்தொரு சேயனை;
வாண னுயிர மலர்க்கை யுதிர்த்துக்
காண்டகு மெச்சங் காத்தனை யாகலிற்
றந்தையர் தம்முளுஞ் சிறந்தொரு தந்தையை;
கைதவ மில்லா வைவர் தமக்கரு
ளெய்தவப் பயனி னியைந்தனை யாகலி
னண்பினர் தம்முளுஞ் சிறந்தொரு நண்பினை;
சேதி நாடன் செய்தீங் கனைத்துங்
காதிற் கொள்ளாப் பொறையினை யாகலிற்
பொறையோர் தம்முளுஞ் சிறந்தொரு பொறையினை;
கன்னன் பிறப்பினை யைவருங் காணுப்
புன்மை புரிந்த பொற்பினை யாகலிற்
கெடுப்போர் தம்முளுஞ் சிறந்தொரு கேட்டினை;
பொன்னு டேகிப் புனைபூம் பவழ
மல்லிகை கொடுவந்து மனைக்குமகிழ் வுறுத்தலிற்
கொழுநர்தம் முள்ளுஞ் சிறந்தொரு கொழுநனை;
பெருநான் மறையின் பெட்பெலாங் கனிந்த
வொருநூ லுரைத்த திருவினை யாகலி
னூலோர் தம்முளுஞ் சிறந்தொரு நூலினை;
வாயங் காப்பி னுலகெலாம் வழங்கிநின்

ருயறி வுறுத்திய தகுதிமை யாகலிற்
கடவுளர் தமக்கெலாஞ் சிறந்தொரு கடவுளை;
இன்ன வாக வெய்ப்பில்பல் லூழியும்
எவ்வெவற் றெவ்வெவை சிறந்த வென்புழி
யவ்வவற் றுண்ணீ யமைந்து தலை சிறத்தலின்
உலகுக் கொருநீ யெனவுணர்ந் துன்னுதூஉம்
நின்னளப் பரிதே நீணிலத் தோர்க்கே
நன்மை செய்கினுஞ் செய்க நலனன்றித்
தின்மை செய்யினுஞ் சிந்தைகொடு செய்க
சுற்றுபு சுற்றுபுன் சூழ்பட லன்றி
வேற்றிட னுண்டே வெறுத்துச் செல்கைக்கே?
அதா அன்று,
என்னை விலக்கலு மொல்லுங் கொல்லோ?
ஆதலின்,
துணை யென நின்னைத் தொழுதன
மிணையடி யளித்தெமை யாளுக வினிதே.

தம்முரு விடுத்துப் பிறிதுருப் பெறுதல்
ஆற்ற வியப்புடைத் தாமென வறைதல்.

விழியகத் தம்மா பிறிதொரு விழியும்
செவியகத் தம்மா பிறிதொரு செவியும்
மூக்ககத் தம்மா பிறிதொரு மூக்கும்
வாயகத் தம்மா பிறிதோரு வாயும்
அறிவகத் தம்மா பிறிதோ ரறிவும்
செறிவுற் று வருதலிற் சிந்தையொடு முரண்டு
விழித்தலுங் கேட்டலு மணத்தலும் பகர்ந்து
சுவைத்தலு மறிதலு மறப்பிறி தாகிப்
பேய்புக் குடலின் பெற்றித் தாகி
வேற்றுத் தலைகொடு வேற்றுமெய் விராஅய்
எற்றுநனி விளங்கி யின்னுயிர் வருத்துந்
தோற்றம் பெற் றென்று துலங்குதல்
ஆற்றவியப் புடைத் ததுவியப் புடைத்தே.

நவநீதகிருஷ்ணபாரதி.

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

[உஉசஎம் பக்கத் தொடர்ச்சி.]

303-வது சூத்திரம். மல்லல் வளனே.

304-வது சூத்திரம். ஏ பெற்றதும்.

இச்சூத்திரங்கள் இரண்டும் ஒரேசூத்திரமாக இளம்பூரணத்திலும், நச்சினார்க்கினியத்திலும் காணப்படுகின்றன. சேனாவரையர்கூற்றின்படி இரண்டாகக்கொள்வதே பொருந்தும்.

322-வது சூத்திரம். கயவென் கிளவி மென்மையு மாகும்.

பாடபேதம்:-இளம்பூரணத்திலும், நச்சினார்க்கினியத்திலும் ஆகும் என்பதற்குப் பிரதியாகச் செய்யும் என்ற பாடம் உளது.

338-வது சூத்திரம். பேணையும் பேணும் பெட்பின் பொருள.

பெட்பு என்பதற்குப் புறந்தருதல் என்ற ஒரேபொருளைக்கூறினர் உரையாசிரியர். புறந்தருதல், விரும்புதல் என்ற இருபொருளைக் கூறினர் சேனாவரையர். புறந்தருதல், விரும்புதல், பெருமை என்ற முப்பொருள்களைக்கூறினர் நச்சினார்க்கினியர்.

342-வது சூத்திரம். எய்யா மையே யறியா மையே.

சேனாவரையர்:— அறிதற்பொருட்டாய் எய்தலென்றானும் எய்த்தலென்றானும் சான்றோர்செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர்மறையன்மை அறிக.

நச்சினார்க்கினியர்:—அறிதலென்னும் உடம்பாட்டிற்கு மறையாகிய அறியாமையென்னும் உரிச்சொல்லான் எய்யாமையே உணர்த்தவே அவ்வெய்யாமை மறைச்சொல்லென்பதூஉம், அதற்கு எய்த்தல் என்னும் உடம்பாட்டுச்சொல் உளதென்பதூஉம் பெற்றாம்.

345-வது சூத்திரம். தெவுக்கோளற் பொருட்டே.

இளம்பூரணத்தில் இச்சூத்திரம் 'நன்று பெரிதாகும்', 'தாவே வலியும் வருத்தமு மாகும்' என்ற சூத்திரங்களின் இடையிலுள்ளது. சேனாவரையத்திலும், நச்சினார்க்கினியத்திலும் 'தாவேவலியும்வருத்தமு மாகும்' 'தெவ்வுப்பகையாகும்' என்றசூத்திரங்களி னிடையிலுள்ளது.

353-வது சூத்திரம். விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்.

இளம்பூரணத்தில் இப்பாடத்திற்குப் பிரதியாக 'விழுமஞ் சீர்மையு மிடும்பையுஞ் செய்யும்' என்ற பாடம் உளது.

360-வது சூத்திரம். இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை.

இதற்கு உதாரணமாக 'இலம்படுபுலவர்' என்பதையே மூவரும் கொடுத்தனர். இலம்படுபுலவர் என்பதற்கு 'இலமென் கிளவிக்குப் படுவருகாலை—நிலையலு முரித்தே செய்யுளான' (தொல். எழுத். புள்ளி. 21) என்னுஞ் சூத்திரவுரையில் இலத்தாற்பற்றப்படும்புலவர் என்று பொருள்கொண்டுள்ளனர் உரையாசிரியர். அக்கொள்கையை நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்தில் மறுத்து இல்லாமை உண்டாகின்ற புலவர் என்று பொருள்கொடுத்துள்ளார்.

362-வது சூத்திரம். கவர்வு விருப் பாகும்.

உரையாசிரியர் இச்சூத்திரத்திற்கு உதாரணமாகக் 'கொள்ளை மாந் தரி னானாது கவரும்' என்பதைக் கொடுத்தனர் இங்குக் கவரும் என்பதற்கு, கைக்கொள்ளும் என்று பொருள்கொண்டார் நச்சினார்க்கினியர்.

389-வது சூத்திரம்.

மெய்பெறக் கிளந்த வுரிச்சொல் லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி
யொத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த
றத்த மாபிற் றென்மனார் புலவர்.

இச்சூத்திரவுரையின் இறுதியில் நச்சினார்க்கினியத்தில் "இங்ஙனங் கூறவே 'முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்' (தொல். சொல். 251) என இடைச்சொற்கு ஓதியவிதி இதற்குங் கூறினாராயிற்று" என்ற சொற்றொடர் உள்ளது. இஃது இங்குப் பொருந்தாததால் ஏட்டில் தவறிவந்திருக்கவேண்டும்.

(தொடரும்).

உ

# கம்பராமாயண இன்கவித்திரட்டு

[இவ் விருபத்தேழாந்தோகுதியின் ௬௰ம் பக்கத்தொடர்ச்சி]

சீதையின் அழகைப்பற்றிய சூர்ப்பநகையின் வருணனையைவிட்டு
அப்பாற்செல்லுமுன், அவ்வழகைக் கம்பர் சூர்ப்பநகைவாயிலாக வரு
ணித்திருப்பதற்கும் அவர் கவிக்கூற்றாகவருணித்திருப்பதற்கும் உள்ள
ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வது தகுதியாகத்தோன்றுகின்றது.
இருவரும் இலக்குமியே சீதையாக வந்ததாகக்கொண்டார்களென்பது,
கம்பர் கவிக்கூற்றாகச் சீதையை 'எப்பெண் பாலும் கொண்டுவ மிப்போர்
உவமிக்கும்—அப்பெண் தானே ஆயின போது' என்றும் 'மலர்மேல்
நின்றிம் மங்கையிவ் வையத் திடைவைக' என்றும் 'போதினை வெறுத்
தரசர் 'பொன்மனை புகுந்தாள்' என்றும் கூறியதனாலும், அவர் சூர்ப்ப
நகைகூற்றாக 'அரவிந்த மலருணீங்கி அடியிணை படியிற் றோயத்—திரு
இங்கு வருவாள் கொல்லோ' என்றும், 'தாமரை துறப் போந்தாள்' என்
றும் கூறியதனாலும் விளங்கும்.

சூர்ப்பநகைகூற்றில், இலச்சுமி வேறு சீதை வேறு, அவளினும்
இவள் சிறந்த அழகியென்று கொள்ளுதற்கிடனாகச் சீதையைநோக்கத்
'தாமரை இருந்த தையல் சேடியாம் தரமும் அல்லள்' என வருகிறதே
யெனின், அதுவும் சீதை 'திருவின் முகத்துத் திரு அன்னாள்' என்ற
கவிக்கூற்றும் உபசாரக்கூற்றுக்களன்றி உண்மைக்கூற்றன்றாமென்க.

பல இடங்களிற் கவிக்கூற்றும் சூர்ப்பநகைகூற்றும் சீதையை இலக்
குமியென்பதில் ஒத்திருப்பினும், சூர்ப்பநகைகூற்றான 'தேர்தந்த' என்ற
மேற்கூறியபாட்டு வரும் ஓரிடத்தில் எடுத்துக்காட்டி விவகரித்துச் சீதை
இலக்குமியினும் சிறந்த அழகுடையாளென்பது புலப்பட உயர்த்துக்
கூறப்பட்டிருப்பது உபசாரமாகக்கொள்ளுதற் கிடங்கொடாமல் உண்
மையாகக் கொள்ளக்கூடியதாயுள்ளது. இஃதொன்றே கவிக்கூற்றுக்கும்
சூர்ப்பநகைகூற்றுக்கும் வேற்றுமையாகத் தெரிகிறது.

கதாசிரியர்கூற்றுக்கும் அவர் கதாபாத்திரங்களின்கூற்றுக்கக்கூறும் கூற்றுக்கும் ஒற்றுமையிருக்கவேண்டிய அவசியமில்லை. அதனினும், சூர்ப்பநகைபோன்ற சற்பாத்திரமல்லாத பாத்திரங்களின் கூற்று, கவிக் கூற்றோடு ஒத்திராமை சகசமேயாம். ஆதலால் மேற்கூறிய வேற்றுமை தோற்றத்திலன்றி உண்மையினும் வேற்றுமையாயிருப்பினும், அதற்குச் சமாதானம் கூறவேண்டிய ஆவசியகமில்லை.

அவ் வேற்றுமை, தோற்றம் மாத்திரத்தில் வேற்றுமையோ, உண்மையினும் வேற்றுமைபோவென்னின், உண்மையில் வேற்றுமையன்றென்பது, சூர்ப்பநகை, தான், சீதையைத் 'தாமரை தவிரப் போந்தாள்' என்றதற் கிசைய, அவளை மகாலக்குமியேயாகவும், பாற்கடலில் அமுதம் தோன்றியகாலத்திலே தோன்றிய இலக்குமியை மகாலக்குமியின் ஓர் அமிசமேயாகவும் கருதிக்கூறினளாகக் கொண்டால் விளக்கமாம்.

சீதாலக்குமியும் திருப்பாற்கடலிலக்குமியும் மகாலக்குமியின் அவதாரங்களேயாக, அவருள் ஒருத்தி மேல், ஒருத்தி கீழ் என்பது எவ்வாறுபொருந்துமெனின், பரசுராமனும் தசரதராமனும் மகாவிட்டுணுவின் அவதாரங்களாயிருந்தும், முன்னவனைப் பின்னவன் வென்றுமேம்பட்டவாறு பொருந்துமென்க.

[சூர்ப்பநகை, சீதை "கண்ணெதிர்ப்பட்டாள்போலும்" தன் வருணனையால் இராவணன் சீதைமீது கழிபெருங்காமமும், அவளைத் தான் அவனுக்கு அறிவித்த உபகாரத்துக்குப் பிரதிஉபகாரமாக அவன் பின்பு "தளை அவிழ் குழல்இவட் கண்டு தந்த என்-இளையவட் களிப்புண் என் அரசு" என்றவாறு, தான் எச்செயலைச் செய்யும்படிவேண்டினும் அதனைத் தடையின்றிச் செய்யுமளவு தன்பால் நன்றியறிவுணர்ச்சியும் உடையனானென்பதை அவன் முகக்குறியானுணர்ந்து, தான் இராமனை அடைதற்கு இதுவே உபாயமென்று எண்ணி, இராவணனை நோக்கி "உன் வீரத்தை உலகோர் காணும்படி அதிவீரனான இராமனை ஊறுபடுத்தாமல் வென்று, அவனுக்குரிமையான சீதையை வெற்றிக்குறியாக உனக்குரிமையாகக்கொண்டு, அவளோடு கூடியாடிக் குலாவுவாயாக; அவளை நீ அடையும்படி நான் செய்ததற்குப் பரிசாக, இராமனை

நான் கலந்து களிக்கும்படி எனக்குத் தருவாயாக" என்றுகூறிப் பின்னும் கூறுகின்றாள்.

"அவரவர்க்குரியவற்றை அவரவர் அடையச்செய்வது விதியே. ஆயினும் அது அவைகளை அவ்வவர் அடைதற்குரிய காலத்திலேதான அடைவிக்குமன்றி முன்னதாக அடைவியாது. ஆகலால், நீ பெருந்தவஞ் செய்து பெற்றிருக்கின்ற ஒருபது திருமுகங்களும் இருபது செங்கண்கள் திண்டோள்களும் பெரிய மார்பமும் அரிய உருவமும் பயன்படுங் காலம் வாராமையால், இதுவரை சீதையை அடைந்தாயில்லை. அந்தக் காலத்தை நீ விரைவாக அடையும்படி அவளை உன்பாற் சேர்க்கக்கருதித் தூக்கமுயன்றேன். இது தான் என் பிழை. தூக்கத்தொடங்கிய போது இலக்குமணன் குறுக்கிட்டு என் மூக்கையும் காதையும் போக்கி விட்டான். போக்கிய அப்போதே அங்கேயே ஆவியை அகற்றியொழித் தற்பாலேனுன யான் நிகழ்ந்ததை நின்னிடம் நிகழ்த்திவிட்டு இறக்க எண்ணி இங்கே எய்தினேன்" என்றாள்.

அப்போது நன்மையென்பனவெல்லாம், தீமை ஒன்று தோன்றி ஊன்றிநின்றபோது, நிலைபாது தொலைதல்போலத் தங்கை பங்கமும் தம்பியர் கொலையும் கேட்டு அவன் மனத்தில் எழுந்த மானக்கொதிப்பும் கோபக்கொதிப்பும் இவ் விருகொதிப்பையும்போக்க மீக்கொண்ட வீரக்கொதிப்பும் ஆகிய எல்லாக் கொதிப்புக்களும் இருந்த இடம் தெரிந்திடாம லொழியக், காமக்கொதிப்பு ஆக்கிரமித்து, அவன் மனத்தை முழுதுங்கவர்ந்து, உயிரையும் பற்றிக்கொண்டது.]

## இராவணனுக்குச் சீதையே நினைவாதல்.

405\. கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்;
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலாதான்.

இ-ள். மன்மதபாணத்தால் (சூர்ப்பநகை சொல்லக்) கேட்ட சீதையை (மட்டும்) மறவாதவன் (ஆன இராவணன், தன் தம்பியர்) கர (ன்முதலியோர் இராமனாற் கொல்லப்பட்ட துக்கத்தி)னையும் மறந்து

விட்டான்; (அந்த இராமன்தம்பியால் அறுக்கப்பட்ட தன்) தங்கை மூக்கை (ப்பற்றிய மானத்தை) யும் (தன் மனத்தினின்றும்) ஓட்டிவிட்டான்; (தனக்குள்ள) பலத்தை (க்கொண்டு, தம்பியர் உயிரையும் தங்கை மானத்தையும் போக்கியவர்களை அதஞ்செய்தற்கு முன்எண்ணின எண்ணத்தை)யும் மறந்தொழிந்தான்; (அப்படி அதஞ்செய்யாததனால்) பொருந்தியபழியையும் நினைத்தானில்லை; (அருந்தவம்புரிந்து சிறந்த வரம்பெற்ற நாம் இவ்வாறு பழிபொருந்துதற் கிடங்கொடுத்தலாகாதென்று நினையாமையால்) முன்பு பெற்ற வரத் (தின் மகத்துவத்) தையும் மறந்துபோனான்.

கடிதல் - ஓட்டுதல். உரன் - (உரம் என்பதன் போலி) வலிமை. அரன் - சிவன். வரன், வரம் என்பதன் போலி. கேட்ட - கேட்கப்பட்ட; செய்வினை செயப்பாட்டுவினைப்பொருளில் வந்தது. 'நின்றார்' 'முன்னம்' என்பனவும் பாடங்கள்.

மன்மதன் சிவனால் எரிக்கப்பட்டானாயினும், அவன், சிவனை உமையை மணக்கச் செய்ததனால் அரனையும் வெற்றிகொண்ட காமனென்றார். அப்படிப்பட்ட காமன் இராவணனை வென்றது எளிதென்பது குறிப்பு. 'தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான் உரனையும்' என்பதற்குத் 'தங்கையினதுமூக்கை அறுத்துநின்ற வீரனுடைய வலிமையையும்' என்பது முந்திய உரைகாரர் கூறியுள்ள பொருள்.

"காமனம்பினால் முன்னைப்பெற்ற வரமென்றது—அளகைநாயகன்றன்மகனாய நளகூபரனை விரும்பிவந்த அரம்பையைக் கண்டு காமுற்றுக் காமனம்பால் நைந்த இராவணன் அவ்வரம்பையை அவளெண்ணத்துக்கு விரோதமாக வலிதிற் புணரத்தொடங்க, அவள் சினந்து 'வந்தியாகநீ மாநில மாதர்தம் – சிந்தை யாலன்றி யாவரைத் தீண்டினும் – கந்த வார்குழ லார்கற் பெரியினால் - வெந்து வீழ்தி....' என்று அவள் கூறிய சாபத்தை." இத்தகைய சாபம் இராவணனுக்கு வேதவதியாற் கொடுக்கப்பட்டதென்று சில இடங்களிலும் பிரமனாற் கொடுக்கப்பட்டதென்று வேறு சில இடங்களிலும் வருதலுண்டு. இங்கே, சம்மானமாய் நன்மை குறிக்கும் வரம் என்பதற்குத் தண்டனையாய்த் தீமைகுறிக்கும் சாபமென எதிரிடைப்பொருள்கொண்டது வியப்புடையதாகத் தோன்ற

வில்லை. அன்றியும், இதுவரை இராவணன் சீதையை வலிதிற்சேர எண்ணினுனென்று குறிப்பிக்கப்படவுமில்லை.

மனநூல்வாணர் (Psychologists) நெடுங்கால ஆராய்ச்சியும் சோதனையும் செய்து அரிது கண்டுபிடித்து நிலைநாட்டியுள்ள அதி முக்கியமான உண்மையைக் கம்பர் மானதப்பிரத்தியக்ஷமாகக் கண்டு இக் கவியிலே எளிதுவிளங்க இனிது புகன்றிருப்பது இறம்பூதினு மிறம்பூதென்பது கேள்விப்பட்டது. மனஇயல் விஷயத்தில் கம்பர் எத்துணை ஆழ்ந்த அபூர்வஞானமுடையவரென்பது இந்தக்கவியினுல் விளங்குதல்போலக் கோலம்காண்படலம் கக-ம் கவியில் 'மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றோ' என்பதனுலும் இப்படலம் ௪00-ம் கவியில் 'இன்பமும் துன்பந் தானும் உள்ளத்தோ டியைந்த வன்றே' என்பதனுலும் விளங்குதல் காண்க. (மஞ்சர் - மைந்தர்.) அவர் மனவியல்பை நுனித்தறிந்திருந்தமையை விளக்கும் கவிகளை வேறுபல இடங்களினும் பார்க்கலாம்.

### இராவணன் சீதையை ஏன் மறக்கவில்லையெனல்.

406 சிற்றிடைச் சீதை யென்னும் நாமமும் சிந்தை தானும்
உற்றிரண் டொன்ருய் நின்ருல், ஒன்றெழித் தொன்றை உன்ன
மற்றெருரு மனமும் உண்டோ? மறக்கலாம் வழிமற் றியாதோ?
கற்றனர், ஞானம் இன்றேற் காமத்தைக் கடக்க லாமோ?

இ - ள். சீதையென்ற நாம (ங் குறிக்கும் பொருளின் உருவ) மும் (இராவணனது) மனமும் பொருந்தி இரண்டும் ஒன்ருய்விட்டால், (அவ் விருபொருள்களுள் மனமாகிய ஒரு பொருள் தான் அவசமாய் இரண்டறக்கலந்துவிட்ட சீதை உருவாகிய) ஒருபொருளை (த் தன்னி னின்றும்) நீக்கி (மறந்து) விட்டு (அவ் விருபொருள்களல்லாதபொருள்க ளுள்ளே கொல்லுண்ட கரன், அரியுண்ட தங்கைமூக்கு முதலியவற் றுள் யாதாயினும்) ஒன்றை (ப் பற்றி) நினைக்க முடியாது. அப்படி நினைக்க) மற்றொருமனம் (வேண்டும். அஃது) உண்டோ? (இல்லை. அஃதில்லாமற் சீதையை) மறக்கக்கூடிய உபாயம் வேறு யா (தேனும் இருக்கிற) தோ? (ஒன்றும் இல்லை இல்லாத இரண்டாம் மனம் துணை

யாக, இராவணன் சீதையை மறத்தல் கிடக்க. கற்ற அவன் கல்வி துணை யாக ஏன் காமத்தைக் கடந்தானில்லையென்றால்,) கற்றவர்களுக்கு மெய் யுணர்வில்லையானால் காமத்தை வெல்ல முடியுமோ (முடியாது: இராவ ணன் கற்றவனாயிருந்தும் மெய்யுணர்வில்லாதனாதலால், காமத்தைக் கடக்கவில்லை யென்க.).

சிற்றிடை - சிறு இடை. நாமம், நாமத்தாற் குறிக்கப்படும் பொரு ளான சீதையின் உருவத்துக்கு ஆகுபெயர். சிந்தை - (இராவண னுடைய) மனம். ஞானம் - மெய்யுணர்வு. அதாவது தோற்றப்பொருட் டொகுதியான பிரபஞ்சநிலையையும் உண்மைப்பொருளான கடவுள் நிலையையும் உள்ளபடி அறியும் அறிவு. 'கற்றறிஞானம்' என்பதும் பாடம்.

ஒருவனுக்கு இரண்டுகைக ளிருத்தல்போல இரண்டுமனங்களில்லை. ஒருகையில் அந்தக் கையோடுகையாய் ஒட்டிய ஒரு பொருளை மற்றொரு கையால் நீக்கிவிடுதல் சாத்தியமாதல்போலச், சீதையும் இராவணன் மனமும் பொருந்தி இரண்டும் ஒன்றாய்விட்டநிலையில் அவைகள் ஒன்றி னின் றொன்றைப் பிரித்தல் இரண்டாம் மனம் இல்லாமையால் இயலாத தாயிருந்த தென்பது கருத்து.

"சீதை யென்னும் நாமமும் சிந்தை தானும் உற்றிரண் டொன்றாய் நின்றால், ஒன்றொழித் தொன்றை உன்ன" என்பதில் 'ஒன்றொழித் தொன்றை' என்ற தொடருக்குச் 'சீதையை ஒழித்துச் சிந்தையை' அல்லது 'சிந்தையை ஒழித்துச் சீதையை' யென்ற நேரான பொருள் கூறாமல் 'சீதையைநீக்கிக் கான்முதலிய பொருள்களுள் ஒன்றை' யென்ற நேரல்லாத பொருளைக் கூறியதன் காரணம் யாதெனின், இப்பாட்டு இதற்குமுந்திய 'கானையும் மறந்தான்' என்ற பாட்டுப் பொருளை விளக்கப் பாடியதாயிருத்தலாலென்பது.

ஈற்றயலடியிற் சீதையை 'மறக்கலாம் வழிமற்றியாதோ'என்ற வினா எழுப்பி, ஈற்றடியிற் காமத்தைக் கடந்தாலன்றிச் சீதையை மறக்க லாகாது; காமத்தைக் கடத்தல் கல்வியாலாகாது; கல்வியுடன் அதனி னும் சிறந்த தத்துவஞானமும் இருந்தாற்றான் காமத்தைக் கடக்கலா மென்பாராய்க் 'கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கலாமோ?'

என்ற வினுவால் விடையிறுத்தார். இதனால் காமபரவசனான இராவணனது மனஇயல்பை விளக்குதலையொட்டிச் சிறந்த பயனுடைய ஒரு பொது உண்மையைப் போதித்திருத்தல் புந்தியிற்கொண்டு போற்றுதற்குரியது. இவ்வாறாகக் கதையோடு பொருந்திப் பொது நீதிகளும் உண்மைகளும் போதிக்கப்பட்டிருத்தலைக் கம்பராமாயணத்திற் பல இடங்களிற் பார்க்கலாம். உதாரணங்கள்காணத் தூரம்போகவேண்டா; இவ் வின்கவித்திரட்டில் இதனை அடுத்துத் தொடுத்துவரும் மூன்று கவிகளின் முடிவுகளை நோக்குக.

407. விதியது வலியி னாலும் மேலுள வினைவி னாலும்
பதியுற்று கேடு வந்து குறுகிய பயத்தி னாலும்
கதிஉறு பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே.

இ-ள். ('ஊழிற் பெருவலி யாஉள மற்றொன்று-சூழினும் தான் முந் துறும்' என்றவாறு தடுக்கக்கூடாத) ஊழின்பலத்தினாலும் இனி (நிகழ்தற்பாலனவாக) உள்ள (மாரீசன் இறத்தல் முதலாய் இராவணன் இறத்தல் இறுதியான) சம்பவங்களாலும் (இலங்கை) நகரம் அடையவேண்டிய தீங்குவந்து நெருங்கியதன் பயனாலும் (இராவணன்கொண்ட) கொடியகாமநோய் கல்வி (இருந்ததிசைபையும்) பாராத அறிவிலி ஒருவன் (பிறர்காணாதபடி) மறைவாகச்செய்த தீவினை (எல்லாரும் காணும்படி பெரிதாக வளர்ந்திடல்) போலவும் வேகம் மிகுந்த யந்திரம்போல (வேகமாக)வும் வளர்ந்திட்டது.

"விதி-இருவினைப்பயன் செய்தஉயிரையே சென்று அடையும் நியதி." 'பல் ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று - வல்லதாம் தாய் நாடிக் கோடலை; - தொல்லைப் - பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த - கிழவனை நாடிக் கொளற்கு' என்பது இங்கே கருதத்தக்கது. வினைவு - இழவினை நாடிக் கொளற்கு' ... விளைவு - சம்பவம் (இலக்கியச் சொல்லகராதி). பயம் - பயன் - பலன். பதி - ஊர்; தலைவன். கதி - விரைவு - வேகம். உறுதல் - மிகுதல். பொறி -

இயந்திரம். பொறியின் - இயந்திரம்போல (வேகமாக). தீமை - தீங்கு. 'பதி' இராவணனாகிய தலைவனைக் குறிப்பதாகவுங் கொள்ளலாம்.

'கதிஉறு பொறியின்' என்பதற்கு 'விரைதலுற்ற அறிவினாலே' என்பதும் '(புலன் நுகர்தலில்) வேகம் பொருந்திய இராவணனுடைய இந்திரியங்களிலே' என்பதும் முந்திய உரைகள். "பதிஉறு கேடுவந்து குறுகிய பயம் - நந்தியினது சாபத்தின்படி வானரரால் இலங்கை அழிய வேண்டியமை."

408. பொன்மய மான நங்கை மனம்புகப் புன்மை பூண்ட
தன்மையோ? அரக்கன் தன்னை அயர்த்ததோர் தகைமை யாலோ?
மன்மதன் வாளி தூவி நலிவதோர் வலத்தன் ஆனான்
வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்த தன்றே.

இ - ள். இராவணன், தன் மனத்தினுள்ளே சீதை புகுந்ததனால், சிறுமை அடைந்த தன்மையினாலோ, தன்னைத் தான் மறந்த தன்மையினாலோ (வன்மைமிக்க தேவர்கள்யாவரும் அஞ்சும் அவனை மெல்லிய பூவே அம்பாகக்கொண்ட மென்மை மிக்க) காமதேவன் அம்பு எய்து வருந்தச் செய்யத்தக்க வல்லமையுடையவனானான். (இது வியப்பன்று;) எல்லாருடைய வல்லமையையும் நீக்கிவிடும் வல்லமை ("வெற்றி அரனையுங் கொண்ட") காமத்தின்கண்ணே தங்கியுள்ளது.

மயம் - அழகு; வடிவம்; சொரூபம் (இலக்கியச் சொல்லகராதி). புன்மை - சிறுமை; இங்கே எளிமை குறித்தது. தன்மையாலோ என்பது தன்மையோ என ஆல் உருபு தொக்கது. வருந்தல் வருத்தல் என்னும் பொருளுடையதாய்த் தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொது வான 'நலிதல்' இங்கே வருத்தலென்னும் பிறவினைப்பொருளில் வந்தது. வலம் - பலம். வதிதல் - தங்குதல். அன்று ஏ அசைகள்.

சிவமயம் என்பது சிவத்தாலாகிய நிறைவு, சிவரூபம் (தமிழ்ச் சொல்லகராதி) என்ற பொருளில் வருதல்போலப், பொன்னாலாகிய (—மகரக்குழையாலாகிய அதாவது அத்தேவியின் எல்லா அழிசங்க

ளாலும் ஆகிய எனவே மகாலக்ஷுமியினது பூரணுவதாரமான) நிறைவு பொருந்திய என்ற பொருளிலும் பொன்னின் (—மகாலக்ஷுமியின்) சொரூபமான என்ற பொருளிலும் 'பொன்மயமான' என்பது வந்ததாகக் கொள்ளல் பொருந்தும். இது, முன்வந்த 'தேர்தந்த' என்ற 404-ம் கவியுரையின் கடைசியில் உள்ள மகாலக்ஷுமியே சீதையாக வந்தாளென்பதனோடு பொருந்துதல் காண்க. 'பொன்மயமான நங்கை' என்பதற்கு '(மிக்க ஒளியால்) பொன்மயமானவள்போலுள்ள சீதை' என்பது முந்திய உரை.

[காமபாவசனுன இராவணன், இனி இங்கிருந்தால், நம்முடைய காமம் வெளிப்பட்டுவிடுமென்று, கொலுவிருக்கைவிட்டு, இபல்பாக எழுகின்ற நேரத்துக்குமுன் எழுந்து தன் மாளிகையினுள்ளேபோனுன். போனவன், பள்ளியறையுள்ளே சென்று, தேவியர் யாவரும் போய்விட ஏவியபின்பு படுக்கையிற்சேர்ந்தான். காமாக்கினியால் ஆகமும் அகமுமேயன்றி ஆவியும் வேவதாயினுல். அவ் வெப்பம் பொறுக்கமாட்டாளுய்ப், படுக்கையிலே தரிக்கமாட்டாளுய், மாளிகையின் உள்ளினும் வெளியே மரங்கள் நிறைந்த வனம் குளிர்ச்சியை அளிக்குமென்று புறப்பட்டுப், பணிப்பெண்கள் அணி அணியாகத் தீபங்களேந்திச் செல்லாநிற்கச் சென்று, ஒரு சோலையை அடைந்து, அங்குள்ள ஒரு வசந்தமண்டபத்தில், அவன் எப்போதுவரினும் அப்போது சயனித்தற்குச் சன்னத்தமாய் அப்போதப்போது புதிதுபுதிதாக மலர்மெத்தை பரப்பிவைத்திருந்த மஞ்சத்தைச் சார்ந்தான். அப்போது பின்பனிப்பருவத்திறுதியும் இளவேனிற்பருவத்துவக்கமும் சந்திக்கும் சமயமாயிருந்தது. தானுற்ற காமவெப்பத்தை அப்போது நிகழ்ந்த பருவவெப்பமென்று அவன் கோபிக்க, அஞ்சி அகன்றதுபோலப் பின்பனிப்பருவம் கழியக், கிரமமாக அடுத்துவருவதாகிய இளவேனிற்பருவம் எய்தியது ]

## இராவணனது விரகதாபம்.

409\. வன்பனி மாழும் தீய மங்கைரும் குளிர வாழும்
மென்பனி எரிந்த தென்றல், வேனிலை விளம்ப லாமோ?
அன்பெனும் விடம்உண் டாரை ஆற்றலாம் மருந்தும் உண்டோ?
இன்பமும் துன்பும் தானும் உள்ளத்தோ டியைந்த அன்றே.?

இ - ள். (வெயிலால் வெதுப்பப்பட்டிருந்த) மரங்களும் மலைகளும் குளிரும்படி (அவைகளின்மீது பனி படிந்து) தங்கும் பனிக்காலமே (இராவணனுக்கு) வெப்பமாயிருந்ததென்றால், வேனிற்காலத் (தின் வெப்பத்)தை விளம்பவேண்டுமோ ? (வேண்டா.) காமமாகிய விடத்தை உண்டவர்களை (அவ்விடத்தால் விளையும் வேதனையால் வருந்தாதபடி) ஆற்றக்கூடிய மருந்தும் உண்டோ? (இல்லை) இன்பமும் துன்பமும் (என்ற இரண்டுநிலைகளும் அவரவர்க்குப் புறத்தேயுள்ள நிலையோடு பொருந்தாமல் அவரவர் அகத்தேயுள்ள) மனநிலையோடு பொருந்தியவைக ளன்றோ? (ஆம்.)

பணை-கிளை. பணைமரம்-கிளைகளையுடைய மரம். பணைத்தல் பருத்த லென்னும் பொருட்டாதலால், 'பணைமரம்' பருத்தமரமுமாம்.

மிகக் குளிர்ச்சியான தேசங்களில், பனிக்காலத்தில், மரங்கள் தீயினாற் கருகினாற்போல இலைகள் உதிர்ந்து நிற்றலை யுட்கொண்டு வெயி லிற் பிறபொருள்களினும் குளிர்ந்திருக்கும் மரங்களும் கரிந்து தீந்து போகவென்பார் 'மரமும் தீய' என்றா ரென்னலாம். வெயிலில் மற்றைப் பொருள்களினும் வெப்புற்றிருக்கும் மலைகளும் குளிர என்று விரித்துக் கூறி 'மலைகளும்குளிர' என்பதில் உள்ள உம்மைப்பொருளை விளக்க லாம். பனி, பனிக்காலத்துக்கு ஆகுபெயர்.

'எதிரிடைகள் இயைபுடையன' எனப் பொருள்படுகின்ற 'Extremes meet' என்ற ஆங்கில வாக்கியப்படி, துக்கமேலீட்டாற் போலவே சந்தோஷ மேலீட்டாலும் கண்ணீர்பெருகுதலும், மிக்க இருளிற்போல மிக்க ஒளியிலும் அறவே கண் தெரியாமையும் 'எதிரிடை கள் இயைபுடையன' என்னும் உண்மையை விளக்கும் நிகழ்ச்சிகளாம். திடீரெனத் தெரியவந்த அதி துக்க சமாசாரத்தாலும் அதிசந்தோஷ சமாசாரத்தாலும் சிலர் இறந்திருக்கின்றனரென்று கூறுவதுண்டு. கடும் பனித்தேசத்திற் கொடுங்குளிர்க் காலத்தில் இரும்புத்துண்டைத் தொட்டோர் கை, தீக்கங்கைத் தொட்டோர்கைபோலக், கொப்புளங்

கொள்ளுமென்றும், உக்கிரமான உட்டணம் உள்ள பிரதேசத்தில், கொடிய கோடைக்காலத்தில், மரங்கள் இலைகளிழந்து கருகிநிற்றல் போல, உறைபனித்தேசங்களிற் கடுமையான பனிக்காலத்தில் மரங்கள் இலைகள் உதிர்ந்துநிற்குமென்றும் கூறுவதும் உண்டு. ஆதலால், 'வன்பணை மரமுந் தீயவாழும் பனிக்கால' மென்றது மிக்க பொருத்தமுடைத்தாம்.

அன்பு-ஆசை. அது, இங்கே ஆண் பெண்ணையும் பெண் ஆணையும் விரும்பும் ஆசையாகிய காமத்தை உணர்த்திநின்றது. 'அன்றே' என்பது, அல்லவா என்று பொருள்படுகின்ற, சொல்வோன் குறிப்பாலும் முன்பின் தொடர்ச்சி (context) யாலும் உடன்பாட்டுப் பொருளுணர்த்தும் எதிர்மறை வினவாக வாயினும், 'அன்று' 'ஏ' என்னும் இரண்டு அசைச்சொற்கள் இயைந்துநின்று வேறுபொருளுணர்த்தாது ஓசை நிறைக்கும் அசைநிலையாகவாயினும் கொள்ளும்படிநிற்றல் குறித்துக் கொள்ளற்குரியது.

மேலே 'கரையும் மறந்தான்' என்ற பாட்டுரையின்முடிவிலே இப் பாட்டின் ஈற்றடி வாக்கியம் கம்பர் மக்கள் மனஇயலை மிக்குணர்ந்தவரென்பதை விளக்கும் பல உதாரணங்களுள் ஒன்றாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இவ் வாக்கியம் சீதளமான சோலையிலே குளிர்ச்சியான இராவிலே இராவணனுக்கு வெப்ப உணர்ச்சி மிக்கது, அவன் மனநிலை காமம் காரணமாக மாறியதனாலெனப் புலப்படுத்தலோடு, சிறந்ததோர் பொது உண்மையைப் போதிக்கின்றது.

இந்த அநுபவசித்தமான அருமந்த அறிவுபொதிந்த அழகிய அரும்பெற லமுதவாக்கியம், தமிழ்ப் பெருங்காப்பியக் கவிஞருள் கம்பரொருவருக்கே பிந்தியவரென்று கருதப்பெற்ற கச்சியப்பமுனிவர் தணிகைப் புராணத்தில் வீராட்டகாசப் படலத்தில் 'அறிவுடையார்க்கு நரகமும் சுவர்க்கமாம்: அறிவிலார்க்குச் சுவர்க்கமும் நரகமாம்' என்னும் உயரிய உண்மைப்பொருள்படக் கூறியுள்ள,

விரகு மேவரின் நரகமும் துறக்கமே; வெதிர்க்கும்
நரக மேவிர கில்லுழி நபத்தகும் இடமும்:
அரவ மாலையான் கயிலையும், அலரவன் தனக்குப்
புரவி லாத்துயர்க் கவநியில் புவனம் ஆகியதே.

என்னும் ௫0-ம் கவியை நினைவுகூரச் செய்கின்றது. கைலாசத்துக்கு வந்து சிவனை வணங்கித் தன்னை வணங்காத அகந்தை மிகுந்த பிரமனைக் குமாரக்கடவுள் வேதமுதன்மொழிபொருள் வினவ, அவன் விளம்ப மாட்டாது விளம்பனஞ்செய்து விழிக்க, அக்கடவுள் வெகுண்டு அவனை அக் கயிலையின்கண்ணே தானே சிறையிலிட்டசந்தர்ப்பத்திற் கூறப் பட்டது இக் கவி.

மேற்படி ஈற்றடி வாக்கியம், ஒருவகையினும் ஒருவரையொருவ ரறியாத உத்தமக்கவிகள் உள்ளங்களிலே ஒரே தன்மையான ஒள்ளிய உயரிய உண்மைகள் உதயமாவதற்கு ஓர் உதாரணமாக வுள்ளது. எவ்வாறெனின், மாளிகைவிட்டுச் சோலையை உற்ற இடமாறுபாட்டா லும் பனிக்காலம்போய் வேனிற்காலம் வந்த காலமாறுபாட்டாலும் விரகதாப வேதனை குன்றுமல் மீதூரக், காமாவேசமான மனநிலை காரணமாக வருந்திய இராவணனாகிய இராமாயணகாவிய கதாநாயகனது எதிரியின்திறத்துக் கவிச்சக்கரவர்த்தி கூறிய 'இன்பமும் துன்பந்தா னும் உள்ளத்தோ டியைந்த அன்றே' என்ற கருத்தே 'காதை நாயகன் கடவுளே! கதைநிகழ் களனே,—மீத லத்தொடு பாதலம் பூதலம்! விடயம்,—பேத மின்றிமாந் தருக்கெலாம் உரித்து எனப் பெரிதும்— ஓத நின்ற காப்பியம்'* ஆகிய பாரடைஸ் லாஸ்டு (Paradise Lost) என்ற ஆங்கிலப் பெருங்காவியகர்த்தாவான மிலிட்டனர் (Milton) மனத்திலும் தோன்றியிருக்கிறது.

மேற்படி ஆங்கிலகாவியத்தின் கதாநாயகனான கடவுளின் எதிரி யான சாத்தனது (Satan) வீராவேசமான மனநிலை விளங்க, 'காலத்

* சுவர்க்கநீக்கச் சிறப்புப்பாயிரம் 8-ம் கவி.

தான் இடத்தான் மாறிடுதல் மருவா மனத்தேன்' 'மனமே தனக்கு வாழிடமாம். மனம் தன்உள்ளே பவர்க்கத்தைத்—தனுவான் சுவர்க்க மதுஆக்கச் சுவர்க்கம் பவர்க்கம் ஆக்கவல்லும்' என்ற பொருள்கள் உள்ள 'One who brings a mind not to be changed by place or time'. 'The mind is its own place, and in itself—can make a Heaven of Hell, a Hell of Heaven' இவற்றை அச் சாத்தன் கூறினனென்று கூறிய மில்ட்டனார்கூற்று, காலமாறுபாடு இடமாறுபாடுகளால் இன்ப துன்பங்கள் எய்துவனவல்ல; அவை அவரவர் மனநிலைமைச் சார்ந்தன என விளக்கும் 'இன்பமும் துன்பந் தானும் உள்ளத்தோ டியைந்த அன்றே' என்ற கம்பர்கூற்றோடு கருத் தொத்திருத்தல் பெருத்த வியப்பை அளிப்பதாம்.

மேலே எடுத்துக்காட்டிய ஆங்கிலகாவியகவிப்பகுதிகள் வரும் சந்தர்ப்பத்தையும் அவற்றை விளக்கும் முன்பின் தொடர்ச்சியான பகுதிகளையும் இத்திரட்டுவாசகர் தெரிந்துகொள்ள விரும்புவாராத லால், அவை யெல்லாவற்றையும் இதனடியில் தருகின்றேன். அவ்வாசக ருள் ஆங்கில மறியாதார்க்கும் புலப்படும்படி அவ்வாங்கிலப் பகுதிகளின் மொழிபெயர்ப்பாயுள்ளதும், மேற்படி பாரடைஸ் லாஸ்டு என்ற நூலுக்குச் சுவர்க்க நீக்கம் எனப் பெயரிட்டு அதன் பன்னிருபகுதிக ளுள் முதற்பகுதியாகிய முதற்காண்டம் என்னால் விருத்தப்பாவில் மொழிபெயர்க்கப்பட்டு ஒருதலைமுறைக்கால (மான முப்பது வருட)த்துக்கு முன்பு அச்சிட்டு வெளியிடப்பட்ட புத்தகத்துள்ளது மான தமிழ்க்கவிப்பகுதியையும் அதன்பொருளைவிளக்கும் வசனப் பகுதியையும் தருகின்றேன்:—

பரமண்டலத்தில், பராபரன் ஒருவனுக்கே துறைந்த
உயர்ந்த பதவியில் இருந்த சாத்தன், அப்பராபரன் இட்ட
கட்டளையைக் கடந்ததற்காக, அவனும்
அவனைப் பின்பற்றிய அவனுடைய
பரிவாரதேவதைகளும்
பாதாளத்திலே படைக்கப்பட்டிருந்த
நரகத்துள்ளே தள்ளப்பட்டபோது,
அவன் கூறியது.

"Is this the region, this the soil, the clime,"
Said then the lost Archangel, this the seat
That we must change for Heaven?–this mournful gloom
For that celestial light? Be it so, since He
Who now is sovran can dispose and bid
What shall be right: farthest from him is best,
Whom reason hath equalled, force hath made supreme
Above his equals, Farewell, happy fields,
Where joy for ever dwells! Hail, horrors! hail,
Infernal World! and thou, profoundest Hell,
Receive thy new possessor—One who brings
A mind not to be changed by place or time
The mind is its own place, and in itself
Can make a Heaven of Hell, a Hell of Heaven.
What matter where, if I be still the same,
And what I should be, all but less than he
Whom thunder hath made greater? Here at least
We shall be free; the Almighty hath not built
Here for his envy, will not drive us hence:
Here we may reign secure; and, in my choice,
To reign is worth ambition, though in Hell:
Better to reign in Hell than serve in Heaven.*

*Paradise Lost, Book I, lines 242—263.

## இதன் மொழிபெயர்ப்பு.

"இன்ன நாடோ இந்நிலமோ இவ்வெங் குளிரும் வெப்பும் உறும்
இன்ன இடங்கொல் லோதுறக்கத் தீடா யாம்வற் றிடக்கடவேம்?
இன்னல் தரும்இவ் இருளோ அவ் எல்லுக் கிணையா வதுவதும்?" என்
றின்ன காலை அழிந்துளதூ துவர்கோன் இயம்பிப் பினும்இ சைப்பான்.

நன்றஃ தாக, இன்றிறையா நண்ணும் அன்னான் எதுநீதி
என்று விதிக்க விதித்தபடி இயைக்க வல்லா னதவினால்.
ஒன்றும் மனோதத் துவங்களின்ஒத் தூற்றமதனால் நயின்மேலாத்
துன்றும் அவன் பால் நின்றுநெடுந் தூரத் திருத்தல் நனிநன்றே.

தருக விடைநீர் களிப்பென்றும் தங்கும் ஆனந் தத்தலங்காள்!
வருக வருக பயங்கரங்காள்! வருக தாழ்ந்த பிலஉலகே!
அரிய ஆழ நரகே!கா லத்தான் இடத்தான் மாறிடுதல்
மருவா மனத்தேன் நின்புதுக்கா வலனேன் வரவேற் றிடுவாயே.

மனமே தனக்கு வாழிட மாம், மனம்தன் உள்ளே பவர்க்கத்தைத்
தனுவ்வான் சுவர்க்க மதுவாக்கச் சுவர்க்கம் பவர்க்கம் ஆக்கவல்லும்.
தனிவான் உருமின் எனின்உயர்ந்தோன் தனக்குத் தாழ்வாம் தாழ்வொழிய,
எனவாற் றானும் குறையில்லா திருக்கும் முறையே உவேன் என்னில்,

முன்னம் இருந்த படியென்றும் முற்றும் உவனேல், யாங்கணியான்
முன்னி யிடினும் அதனாலென்? மற்றிங் கெனினும் சுவாதீனம்
துன்னி வாழ்தும்; இங்கணியாம் துய்க்க நோக்கி அழுக்கறுக்கும்
அன்ன பொருள்ஒன் றும்படைத்தான் அல்லான் எல்லாம் வல்லானே.

இங்கு நின்று நமைத்துரத்தீான்; யாம்ஓர் கவற்சி யிலாதாட்சி
இங்கு புரிய லாம்; நரகின் எனினும் இறைமை நயத்தரும்; ஈ.
திங்கென் கருத்தால்; வானிடைத்தொண் டியற்று குடியா வாழ்தலினும்
இங்கு நிரயத் திறையவனா வெய்தல் இனிப தினியதரோ.*

இ-ள். அழிவடைந்துள்ள தேவதூதத்தலைவன் இந்தச் சமயத்தில் [அவர்கள் இறங்கிய இடத்தை நோக்கிப்] பின்வருமாறு கூறுகின்றான்:—"இந்த நாடோ! இந்த நிலமோ! இந்தக் கொடுங்குளிரும் கொடும் வெப்பும் உள்ள இடமோ! நாம் பரமண்டலத்தக்குப் பிரதியாக

---

*சுவர்க்கநீக்கம், முதற்காண்டம், பாட்டுக்கள் ௯௨—௧௦௪.

ஏற்றுக்கொள்ளவேண்டும்? துக்ககரமான இந்த இருளோ, அந்தத் திவ்ய ஒளிக்குப்பதிலாகப் பெற்றுக்கொள்ளவேண்டியது? இப்போது அரசனு யுள்ளவன், இன்னது நீதி என்று விதிக்கவும் விதித்தபடி நிலைநிறுத்த வும் வல்லவனாதலால், அவையெல்லாம் அவன் கருத்துப்படியே யிருக் கட்டும். மனோசக்திகளால் நம்மை ஒத்துப் பலத்தினால் நமக்கு அதிகனாகிய அவனிடத்திலிருந்து நாம் எவ்வளவுதூரத்தில் இருக்கிறோ மோ, அவ்வளவும் நல்லதே. நித்தியானந்தத் தலங்களே! நீங்கள் எனக்கு விடைகொடுப்பீர்களாக! பயங்கரங்களே! வருவீராக! பாதாள மே! நீயும் வருவாயாக! ஏ அரிய ஆழமுடைய நரகே! காலதேசபேதத் தால் மாறுதல் அடையாத மனத்தை உடையனாகிய உன்னுடையபுதிய அரசனாகிய என்னை வரவேற்றுக்கொள்வாயாக. மனமானது [மற்றொன் றையும் தனக்குச்சாரிடமாகவேண்டாது] தனக்குத்தானே இடமா யிருக்கிறது. அது [சுகம் அநுபவிக்கும் சுபாவமுடையதாயிருந்தால் நாகமத்தியிலும் சுகம் அடைவதாயும், துக்கம் அநுபவிக்கும் சுபாவ முடையதாயிருந்தால் சுவர்க்கமத்தியிலும் துக்கம் அடைவதாயும் இருப்பதால்] தனக்குள்ளே நரகத்தைச் சுவர்க்கமாக்கவும் சுவர்க்கத்தை நரகமாக்கவும் வல்லது. இடி ஒன்றினால் அதிகனாகிய அவனுக்குச் சற்றுத் தாழ்ந்திருக்கும் தாழ்வொழிய, வேறெந்தவகையிலும் குறை யின்றி நான் இருக்கவேண்டியபடியே முன்னிருந்தது போலவே எப்போ தும் இருக்கின்றனன் என்னில், நான் எங்கிருந்தாலும் என்ன? இங்காயி னும் நாம் சுவாதீனராக வாழ்வோம். இங்கு, நாமனுபவிக்கப்பார்த்துத் தான் பொறாமைகொள்ளும்படியான பொருளொன்றையும் எல்லாம் வல்லான் படைத்துவைக்கவில்லை. ஆதலால், அவன் இங்கிருந்தும் நம்மைத் துரத்தமாட்டான். இங்கு நாம் கவலையில்லாமல் அரசாட்சி செய்யலாம். நரகத்திலாயினும் இராசாங்கம் ஆசைப்படத்தக்கதென் பது என் அபிப்பிராயம். பரமண்டலத்தில் தொண்டுசெய்வதிலும் நர கத்தில் அரசாளுதல் நல்லதே.*

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

*சுவர்க்கநீக்கவசனம், முதற்காண்டம், பக்கங்கள் ௩௩-௩௪.

# மதிப்புரை.

நளன் அல்லது விதியின்வெற்றி:—இது, வரையாதளிக்கும் வள்ளல்களில் ஒருவனான நளசக்ரவர்த்தியின்சரிதத்தை நாடகவியலி லமைத்து, திருவல்லிக்கேணி, ஸ்ரீமாந். க. இராமசாமி ஐயங்காரவர்க ளால் எழுதப்பெற்றது. "வல்லா டாயத்து மண்ணர சிழந்து, மெல்லி யல் தன்னுடன் வெங்கா னடைந்தோன், காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி, தீதொடு படூஉம் சிறுமைய ளல்லள், அடவிக் கானகத் தாயிழை தன்னை, இடையிருள் யாமத் திட்டுநீக் கியது, வல்வினை யன்றோ" என்ற ஆன்றோர்கூற்றிற்கேற்ப, ஊழ்வலியுறுத்தும் இயல்பினதாய இக்கதைக்கு 'விதியின்வெற்றி' என மறுபெயர் வழங்கியிருப்பதும் பொருத்தமுடையதாகும் நிற்க.

இதன் தமிழ்நடை மிகத்தெளிவும் தூய்மையும் உடையதாகிச் செல்கின்றது. சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமான தமிழ்ப்பாடல் கள் இடையிடையே எடுத்தாளப்படுகின்றன. நாடக அமைப்பிற் கேற்பக் கதையினை நன்கு புனைந்துரைக்கும் தன்மையும், கதா பாத்திரங்களின் குணஞ்செயல்களோடு பொருந்த அவரவர்களின் சம்பாஷணங்களை இனியவாறு இயைத்துக்கூறுவதும், அரியனவாய பற்பலநீதிகளையும் புகுத்து வற்புறுத்திச்செல்லுந்திறனும். ஆகிய இவையனைத்தும் இதுபோன்றநாடகங்கள் எழுதுவதில் இதன் ஆசிரிய ரவர்களுக்குள்ள ஆற்றலை நனகு புலப்படுத்துவனவாம்.

இச்சிறப்பியல்புகளால் இதனைப் படிப்பவர்கட்கேயன்றி நாடக மேடைகளில் நடிப்பவர்களுக்கும் இது மிகுந்த பயனளிக்கவல்லது. அன்றியும், தமிழ்மொழியில் இத்தகையபுத்தகங்கள் இல்லாதகுறையை நிறைவிப்பதோடு இன்னும் பலநாடகங்கள் எழுதுவார்க்கு இஃதொரு நல்ல வழிகாட்டியாகவும் அமைகின்றது. இதன் விலை அணா 12; வேண்டுவோர், திருவல்லிக்கேணி. 2, ஆறுமுகசெட்டிதெரு, ஸ்ரீ க. இராம சாமி ஐயங்காரவர்களிடம் பெறலாம்.

வைத்தியவிளக்கம் என்னும் அமிர்தசாரமும் பதார்த்தசூடாமணியும்:—இவை, யாழ்ப்பாணத்து ஏழாலைச் சுதேசவைத்தியர், திரு. அ. பொன்னையபிள்ளையவர்களால் தனிப்புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டன. இற்றைக்குத் தொண்ணூறுவருடங்கட்குமுன்னர் இருபாலைச் செட்டியார் என்ற பெயர்வாய்ந்த துறவியொருவரால் இவை இயற்றப் பெற்றனவாம். வைத்தியமுறைபற்றி அறியவேண்டிய அரியவிஷயங்கள் பலவும் இப்புத்தகத்தில் அடங்கியிருத்தலோடு, இதன் செய்யுள் நடையும் மிகத் தெளிவுடையதாயிருத்தலால் எல்லார்க்கும் இது பயன்படுமென்பது சொல்லாமலே விளங்கும் சுதேசவைத்தியத்தின் அபிவிருத்திக்கு இது பெரிதும் துணைபுரியுமென்பது ஒருதலை. இதன் பதிப்பாசிரியரால் இதற்குச் சிறந்ததொரு முகவுரையும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

பரராஜசேகரம் (முதற்பாகம்) இதுவும் செய்யுள்நடையில் அமைந்த சிறந்ததொரு வைத்தியநூலாகும். இற்றைக்கு மூந்நூறு ஆண்டுகட்குமுன்னர் இயற்றப்பெற்றது. சிரரோகநிதானம் இதில் விரிவாகவும் விளக்கமாகவும் உரைக்கப்பட்டுள்ளது. இதுகாறும் வெளிப்போந்துள்ள தமிழ் மருத்துவநூல்களில் இது மிகவும் சிறந்ததாகக்காணப்படுகிறது. மற்றும் இதன் பெருமைகளை இதன் முகவுரைநோக்கி உணரலாகும். இதனையும் பிழைபறப் பரிசோதித்து அச்சிட்டுதவிய யாழ்ப்பாணத்து ஏழாலைச் சுதேசவைத்தியர் திரு. அ. பொன்னையபிள்ளையவர்களின் நன்முயற்சி பெரிதும் பாராட்டற்பாலது. இவைபோன்ற அரியபுத்தகங்களைப் பெரிதும் ஆதரிப்பதே தமிழ்மக்களுக்குச் சிறந்தகடமையென்பது சொல்லவேண்டுவதில்லை. ஆகையால் பலரும் ஊக்கமளித்து உதவிபுரிவார்களாயின் இதன் பதிப்பாசிரியரவர்கள் இன்னும் பலநூல்களை வெளியிடுவதற்குச் சாதகமாயிருக்கும். இவ்விரண்டுபுத்தகங்களும் விலைக்குவேண்டுவோர் மேற்படி பதிப்பாசிரியரவர்கட்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

திருவருண்மாலை:—இது, பெரியகுளமென்னும் திருக்குளந்தை முருகக்கடவுள்மீது, மதுரைச் சைவத்திருவாளர் மதுரஞ் சுந்தரபாண்டிய ஓதுவாமூர்த்தியவர்களாற் பாடப்பெற்றதொரு செந்தமிழ்ப் பிரபந்தமாகும். இதன் செய்யுட்கள்யாவும் எதுகைமோனைத் தொடை

களாற் சிறந்து செவ்விய நடைதழுவிச் செல்லுகின்றன. அன்றியும் இவை பக்திரஸம்ததும்புவனவாய்ப் படிப்பவர்களைப் பேரின்பமுறச் செய்வனவாம். விலை அணா 2: மதுரை. புதுமண்டபம் பி. நா. சிதம்பர முதலியாரவர்களிடம் கிடைக்கும்.

திருமலைச்சிந்து:—இது, அநுமந்தன்பட்டி மதுரகவி ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் இயற்றியது. திருவேங்கடத்துத்திருமால்விஷயமான தோத்திரங்களால் அமைந்தது. இதன் பாடல்கள் சந்தவின்பம் செறிந்தனவாய்ச் சொன்னோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் முதலிய அனைத்தும் வாய்ப்புடையவாகப்பெற்று மிளிர்கின்றன. ஆசிரியரது கவித்திறமை மிக மேலானதாக மதித்தற்குரியது.

திருமுட்டநான்மணிமாலை:—இது, தெற்குவிருதாங்கன், திரு. நா. சுப்பிரமணியபிள்ளையவர்களால், ஸ்ரீமுஷ்ணமென்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள வராகப்பெருமாள்பேரில் இயற்றப்பெற்ற தோத்திரப்பாமாலையாகும். இலக்கண இலக்கிய வழக்கு வழிப்பட்ட செய்யுட்டொடைகளால் ஆக்கப்பட்டுள்ளது. ஆசிரியரவர்களுடைய திருமால்பத்தியும் செய்யுளியற்றும் வன்மையும் மிக அருமையுடையனவாகக் காணப்படுகின்றன.

படைவேட்டுப்புராணம்:—இது, காமக்கூர், தமிழ்வித்வான் திரு. கா. மு. சுந்தரமுதலியாரவர்கள் எளிய தமிழ்நடையில் இனிமையாக எழுதியது. அத்தலவரலாறுபற்றி அறிதற்குரிய பல அரியவிஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. விலை அணா 2. வேண்டுவோர், திரு, மு. சுந்தரமுதலியாரவர்கள், தமிழ்வித்வான, காமக்கூர், களம்பூர்ப் போஸ்டு (வடஆர்காடு) என்ற விலாசத்திற் பெறலாம்.

அப்பர்புகழ்மாலை:—இது, சைவசமயாசாரியருள் ஒருவராய திருநாவுக்கரசர்விஷயமான தோத்திரங்களாகப் பலநூல்களிலும் ஆங்காங்குக் காணப்படும் பாடல்களையெல்லாம் ஒருங்கு தொகுத்துத் திருவாளர் கு. கி. நாராயணசாமிநாயுடுஅவர்களால், புத்தகரூபமாக வெளியிடப்பெற்றது. விலை அணா 4. வேண்டுவோர் திருநாமகல்லூர்ப்போஸ்டு கிழக்குமருதூர்த் திருச்சிற்றம்பல இல்லத்தில் ஆசிரியரவர்கட்கு எழுதிப் பெறலாம்.

அகில இந்தியா லா ஜர்னல்:—இஃதொரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. அரசியற் சட்டங்களின் அமைப்பையும் அதுபற்றி நியாயாதிபதிகள் அவ்வப்பொழுது செய்துள்ள தீர்ப்புக்களையும் ஆங்கிலங்கல்லாதாரும் அறிந்துகொள்ளுமாறு இது வெளியிடப்படுகின்றது. இது மிகவும் அரியதொரு முயற்சியேயாம். இதன்பயனும் அளவிடற்பாலதன்று. தகுதிவாய்ந்த வழக்கறிஞர்களே இதனை மேற்கொண்டிருத்தலால் இனிது நிறைவேறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பொருளுரைகள் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு சஞ்சிகையும் 64-பக்கங்களுடையதாய் நல்லகாகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பெற்று விளங்குகிறது. இதன் வருடச்சந்தா ரூ. 5. வெளிநாடுகளுக்கு ரூ. 5–12–0 தனிப்பிரதி அணா 8. வேண்டுவோர் மானேஜர், அகில இந்தியா லா ஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

யாதவமித்திரன்:—இஃதொரு புதிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனுரவர்களைப் பதிப்பாசிரியராகப் பெற்று வெளிவருவது. யாதவர்களின் சமூக முன்னேற்றங்கருதி உழைப்பதை மேற்கொண்டுள்ள இப்பத்திரிகை இதுபொழுது மிகவும் இன்றியமையாததென்றே சொல்லலாம். இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள கோனுரவர்களின் குலாபிமானம் மிகப் பாராட்டற்பாலது. வருடச்சந்தா ரூ. 1. வெளிநாடுகளுக்கு ரூ. 1–8–0. வேண்டுவோர் மானேஜர், யாதவமித்திரன் ஆபீஸ், ஸ்ரீ. கோபால் மஹால் வடக்குச்சித்திரைவீதி, மதுரை என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

மாத்வமித்திரன்:—இது கும்பகோணம் ஸ்ரீ. ம. வே. பாகவதரங்கநாதாசாரியாரவர்களைப் பத்திராதிபராகக்கொண்டு நடைபெற்று வருவது. பௌர்ணமிதோறும் வெளியிடப்படுவது. இதில் பொதுவான வைதிகதர்மங்களும் மாத்வமத சம்பிரதாயங்களும் ப்ரமாணங்களுடன் நன்கு வ்யவஹரிக்கப்படுமென்று தோன்றுகிறது. த்வைதமதவுணர்வு தமிழ்நாட்டிற் பரவுவதற்கு இது ஒரு சிறந்தசாதனமாகும். வருடச்சந்தா ரூ. 3. வேண்டுவோர் ஸ்ரீ பாகவதரங்கநாதாசாரியாரவர்கள், ஸ்ரீ வியால விலாசம், கும்பகோணம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.